24.01.2015

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

## கொங்கு கலை, அறிவியல் கல்லூரியில் தண்ணீர் விழிப்புணர்வு ஓவியக் கண்காட்சி

ஈரோடு அருகே, நஞ்சனாபுரம் கொங்கு கலை, அறிவியல் கல்லூரியில் தண்ணீர் விழிப்புணர்வு தொடர்பான ஓவியக் கண்காட்சி வெள்ளிக்கிழமை நடைபெற்றது. கல்லூரியின் ஃபைன் ஆர்ட்ஸ் கிளப் சார்பில் நடைபெற்ற இக்கண்காட்சியில் கடலூர் மாவட்டத்தைச் சேர்ந்த ஈரநிலம் அறக்கட்டளைத் தலைவர் என்.தமிழரசனின் ஓவியங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. தண்ணீர் சேமிப்பு, சிக்கனம், குறைவான பயன்பாடு, முக்கியத்துவம் உள்ளிட்டவற்றை விளக்கும் வகையில் அவரால் தத்ரூபமாக வரையப்பட்ட 50 ஓவியங்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. கல்லூரி மாணவ, மாணவிகளிடம் தண்ணீர் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் தமிழகம் முழுவதும் ஒவ்வொரு மாவட்டத்துக்கும் ஒரு கல்லூரி என்ற வகையில் இக்கண்காட்சி நடத்தப்படுகிறது. கொங்கு கலை, அறிவியல் கல்லூரியில் இக்கண்காட்சியை கொங்கு வேளாளர் தொழில்நுட்பக் கல்வி அறக்கட்டளை துணைத் தலைவர் ஏ.வெங்கடாசலம் தொடங்கிவைத்தார். கல்லூரித் தாளாளர் பி.சச்சிதானந்தன், கல்லூரி முதல்வர் என்.ராமன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.கண்காட்சி குறித்து ஈரநிலம் அறக்கட்டளைத் தலைவர் தமிழரசன் கூறியதாவது: பிப்ரவரி 27-ஆம் தேதி வரை தொடர்ந்து ஒவ்வொரு மாவட்டமாக இக்கண்காட்சி நடத்தப்படும்.தொழில்சாலைக் கழிவுகள், பொது இடத்தில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதால் ஏற்படும் பிரச்னைகள், தண்ணீர்த் தட்டுப்பாடு காரணமாக பொதுமக்கள் இடம்பெயர்ந்து செல்லுதல், தண்ணீர் இல்லாததால் மரங்கள், பறவைகள், விலங்குகள் பாதிக்கப்படுவது உள்ளிட்டவை குறித்து

பல்வேறு கல்லூரி மாணவ, மாணவிகளிடம் ஓவியங்கள் மூலமாக விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறேன் என்றார். இக்கண்காட்சிக்கான ஏற்பாடுகளை ஃபைன் ஆர்ட்ஸ் கிளப் ஒருங்கிணைப்பாளர் என்.ராதிகா, இணை ஒருங்கிணைப்பாளர் எம்.எஸ்.கோகிலா, உறுப்பினர் ஆர்.பார்கவி உள்ளிட்டோர் செய்திருந்தனர்.

## <u>கரும்புகளை 31ம் தேதிக்குள் பதிய விவசாயிகளுக்கு வாய்ப்பு</u>

திருவாலங்காடு: 'கரும்பு விவசாயிகள், வரும், 31ம் தேதிக்குள் பதிவு செய்து கொள்ளலாம்' என ஆலை நிர்வாகம் வாய்ப்பு அளித்துள்ளது. திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலை திருவாலங்காட்டில் இயங்கி வருகிறது. இந்த ஆலையில், 3,320 விவசாயிகள் தங்களின் கரும்புகளை பதிவு செய்து, ஆலைக்கு கரும்புகளை அளித்து வருகின்றனர். நடப்பாண்டின் கரும்பு அரவை கடந்த, நவம்பர் மாதம் முதல் தொடர்ந்து நடந்து வருகிறது. இதுவரை கரும்புகளை ஆலையில் பதிவு செய்யாதவர்களுக்கு ஆலை நிர்வாகம் புதிய வாய்ப்பு அளித்துள்ளது. இதுகுறித்து, ஆலையின் நிர்வாக மேலாண்மை இயக்குனர் மலர்விழி கூறுகையில், "கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு கரும்புகளை விவசாயிகள் ஓட்டுவதற்கு இதுவரை பதியாதவர்கள், வரும், 31ம் தேதிக்குள், அந்தந்த பகுதியில் உள்ள கரும்பு கோட்ட அலுவலகங்களில் உள்ள கரும்பு அலுவலர்களிடம் தங்களின் பெயர்களை விவசாயிகள் பதிவு செய்து கொள்ளலாம். கரும்புகளை பதிவு செய்து நடப்பாண்டிலேயே ஆலைக்கு ஓட்டலாம்," என்றார்.

# தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

## <u>வாழைத்தார் விற்பனையில் களை கட்டும் பரமத்திவேலூர்</u>

பரமத்திவேலூர்:நாமக்கல் மாவட்டம் பரமத்திவேலூரில், சுவை மிகுந்த வாழைத்தார்களை வாங்குவதற்கு தமிழகம் மட்டுமின்றி வெளிமாநில வியாபாரிகளும் குவிகின்றனர். இதனால், இந்த சந்தை எப்போதும் களை

கட்டுகிறது. நாமக்கல் மாவட்டம், பரமத்தி வேலூர் தாலுகா, பாண்டமங்கலம், பொத்தனூர், நன்செய் இடையார் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் ஆயிரக்கணக்கான ஏக்கரில் விவசாயிகள் வாழை பயிரிட்டுள்ளனர். இங்கு விளையும் வாழைத்தார்களை உள்ளூர் பகுதிகளில் உள்ள கடைகளுக்கும், வியாபாரிகளுக்கும் விற்பனை செய்கின்றனர். வாழைத்தார்களை வாங்கி. லாரிகள் மூலம் தமிழ்நாட்டிலுள்ள திண்டுக்கல், மதுரை, திருச்சி, கரூர், ஈரோடு, கோவை நாமக்கல், நீலகிரி, சேலம் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களுக்கும், ஆந்திரா, கேரளா, கர்நாடகா, உத்திரபிரதேசம் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களுக்கும் அனுப்பி வைக்கின்றனர். அதே போல், நன்செய் இடையார் செல்லும் சாலையில் விவசாயிகள் தங்கள் வாழைத்தோட்டத்தில் இருந்து வாழை இலைகளை கட்டுக்கட்டாக கொண்டு வந்து விற்பனை செய்கிறார்கள். இதை பல்வேறு மாவட்டங்களில் இருந்து வியாபாரிகள் வாங்கிச்செல்கின்றனர். வாழை தார் இருப்பு வைப்பதற்கு குளிர்சாதன கிடங்கு அமைத்து விவசாயிகளுக்கு அரசு உதவி செய்ய வேண்டும் என வாழை பயிரிட்டுள்ள விவசாயிகள்கோரிக்கைவிடுத்துள்ளனர்.

**<u>அடியுரமிட்டு உளுந்து பயிரிட்டால் அதிக மகசூல்</u>**

சேதுபாவாசத்திரம், : உளுந்து சாகுபடியில் அடியுரமிட்டு பயிரிட்டால் அதிக மகசூல் பெறலாம் என சேதுபாவாசத்திர வட் டார வேளாண்மை உதவி இயக்குநர் பெரியசாமி கூறியுள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது: உளுந்து சாகுபடிக்கு ஜனவரி மற்றும் பிப்ரவரி, மார்ச் மாதங்கள் ஏற்ற தருணங்கள் ஆகும். விதை நேர்த்தி செய்த உளுந்து விதைப்பு செய்தவற்கு முன் நிலத்தை நன்கு உழவு செய்து கட்டிகளை உடைத்து சமன்படுத்தி நீர் பாய்ச்சுவதற்கு ஏற்ற வகையில் பாத்திகள் அமைக்க வேண்டும். ஒரு ஏக்கருக்கு 5 டன் தொழுஉரத்துடன் ரசாயனம் உரம் யூரியா 20 கிலோ, சூப்பர் பாஸ்பேட் 50 கிலோ, பொட் டாஷ் 16 கிலோ கலந்து இடவேண்டும். இதனால் மண்ணின் வளம் நிலைநிறுத்தப்பட்டு அதிக மகசூல் பெற வழிவகை ஏற்படுகிறது. ஒரு ஏக்கர் விதைப்பு செய்வதற்கு சான்று பெற்ற விதை நேர்த்தி செய்யப்பட்ட 8 கிலோ விதை போது மானது. விதைக்கும்போது வரிசைக்கு

வரிசை 30 செமீ செடிக்குச் செடி 10 செமீ இடைவெளியில் ஒரு குழிக்கு 2 விதைகள் வீதம் 2 செமீ ஆழத்தில் விதைப்பு செய்ய வேண்டும். விதைப்பு செய்தவுடன் ஒரு முறையும் 3ம் நாள் மறுமுறையும் 10-15 ம் நாள் நீர் பாய்ச்ச வேண் டும். முக்கியமாக பூக்கும் தருணத் திலும், காய் பிடிக் கும் தருணத்திலும் நீர் பாய்ச்சுதல் அவசியம். களைகளை கட்டுப்படுத்த பென்டிமெத்திலின் என்ற களைக்கொல்லியினை ஏக்கருக்கு 800 மில்லி வீதம் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து விதைத்த 3ம் நாள் தெளித்து களைகளை கட்டுப்படுத்தலாம். உளுந்து பயிரில் திரட்சியான சுருங்காத மணிகளை பெற பூக்கும் தருணத்தில் ஒரு முறையும் 15 நாள் இடைவெளி விட்டு ஒரு முறையும் 2 சத டி.ஏ.பி கரைசல் அல்லது ஒரு சத யூரியா கரைசலை தெளிக்க வேண்டும். 2 சத டிஏபி கரைசல் தயாரிக்க 4 கிலோ டிஏபி உரத்தினை 25 லிட்டர் தண் ணீரில் கலந்து ஒரு இரவு முழுவதும் ஊற வைத்து பின்பு அதிலிருந்து தெளிந்த கரைசலை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து காலை அல்லது மாலை வேளையில் செடிகளில் நன்கு படும்படி கைத் தெளிப்பான் கொண்டு தெளிக்கவேண் டும். தேவைப்படும் பட்சத்தில் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறை களை கையாள வேண்டும். இவ்வாறு தொழில் நுட்பங்களை கடைப்பிடிக்கும் பட்சத்தில் ஒரு ஹெக்டேருக்கு 630 கிலோ வரை மகசூல் பெறலாம். இவ்வாறு அதில் குறிப்பிட்டுள்ளார்.

<u>**பிப்ரவரி 15க்குள் எள், உளுந்து பயிரினங்களை காப்பீடு செய்ய அழைப்பு**</u>

தஞ்சை, : தஞ்சை மாவட்டத்தில் சாகுபடி செய்ய உள்ள உளுந்து மற் றும் பயரினங்களை வரும் பிப்ரவரி 15ம் தேதிக்குள் காப்பீடு செய்துக் கொள்ள விவசாயிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. தஞ்சை மாவட்டத்தில் தஞ்சை, பெரம்பூர், திருக்காட்டுப்பள்ளி, பூதலூர், ஆவனம், பேராவூரணி, பெருமகலூர் பிர்காவை தவிர மற்ற பிர்காவில் உளுந்து சாகுபடி செய்யும் விவசாயிகள் பயிர்காப்பீடு செய்ய லாம். பிரிமிய தொகையாக கடன்பெறா விவசாயிகள் ஏக்கருக்கு ரூ.49ம், கடன் பெறும் விவசாயிகள் ஏக்கருக்கு ரூ.54ம் செலுத்தி தங்கள் பயிரை ரூ.5427க்கு காப்பீடு செய் துக் கொள்ளலாம். பயரைப்

பொறுத்தவரை ராமநாதபுரம், பந்தநல்லூர், திருப்பனந்தாள், கதிராமங்கலம், அய்யம்பேட்டை, கபிஸ்தலம், பாப நாசம், மெலட் டூர், சாலியமங்கலம் ஆகிய பிர்க்கா விவசாயிகள் பயிர்க்காப்பீடு செய்யலாம். பிரி மிய தொகையாக கடன் பெறா விவசாயிகள் ஏக்கருக்கு ரூ.44ம், கடன் பெறும் விவசாயிகள் ஏக்கருக்கு ரூ.49ம் பிரிமியம் செலுத்தி தங்கள் பயரை ரூ.4853க்கு காப்பீடு செய்யலாம். இத்திட்டத்தில் வரும் பிப்ரவரி 15ம் தேதிக்குள் சேர வேண்டும். திருப்பனந்தாள் தவிர மற்ற வட்டாரத்தில் எள் சாகுபடி செய்ய உள்ள விவசாயிகள் தங்கள் பயரை ஏக்கர் ரூ.74க்கு கடன் பெறா விவசாயிகளும், கடன்பெறும் விவசாயிகள் ரூ.82ம் செலுத்தி ரூ.8240க்கு பயிர்க்காப்பீடு செய்யலாம். இதற்கு வரும் 31ம் தேதியா கும். மேலும் விவரங்களுக்கு தங்கள் பகுதி கூட்டுறவு வங்கியையோ அல்லது மாவட்ட ஒருங்கிணைப்பாளரை கேட்டு தெரிந்து கொள்ளலாம் என தஞ்சை மாவட்ட ஒருங்கிணைப் பாளர் பழனியப்பன் தெரிவித்துள்ளார்.

## 933 வாழைத்தார்கள் ஏலம்

திருச்சி, : திருச்செந்துறையில் 933 வாழைத்தார்கள் ஏலம் போனது. ஸ்ரீரங்கம் அடுத்த திருச்செந்துறை ஒருங்கிணைந்த வாழை வணிக வளாகத்தில் திருச்சி வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை சார்பில் செவ்வாய்க்கிழமை தோறும் வாழைத்தார் பொது ஏலம் விடப்பட்டு வருகிறது. இதன்படி நேற்று முன் தினம் துவங்கி நேற்று அதி காலை வரை பொதுஏலம் நடந்தது. இதில் கிளியநல்லூர், கரியமாணிக்கம், சிறுகாம்பூர், சென்னக் கரை, செங்குடி, குணசீலம், ஆமூர் ஆகிய கிராமங் களை சேர்ந்த விவசாயிகள் 12 பேர் பூவன், ரஸ்தாலி, கற்பூரவள்ளி, மொந்தன், பச்சநாடன், ஏலரிசி ரகங் களை சேர்ந்த 933 வாழைத்தார்களுடன் வந்தனர். அதே வேளையில், திண்டுக்கல், பழனி, பண்ணப்பட்டி, பெருகமணி, சிறுகமணி, ஜீயபுரம், கடியாக்குறிச்சி, நம்பியூர், புத்தூர், கே.கே.நகர் ஆகிய ஊர்களிலிருந்து வந்திருந்த 17 வியாபாரிகள் வாழைத்தார்களை ஏலம் எடுத்தனர். இந்த வாழைத்தார்கள் அனைத்தும் ரூ.63,175க்கு ஏலம் எடுக்கப்பட்டது. இதில் ரஸ்தாலி தார் ஒன்று அதிகப்பட்சமாக ரூ.200, பூவன் ரூ.280, கற்பூரவள்ளி ரூ.225 வீதம் ஏலம்

போனது. இந்த வாரமும் இடைத்தரகர்களின்றி, எந்தவித கமிஷன் இல்லா மல் ஏலத்தில் பங்கேற்ற விவசாயிகள் அனைவருக் கும் உடனுக்குடன் பணம் பட்டுவாடா செய்யப்பட்டது.

## <u>பண்டுதகாரன்புதூர் மையத்தில் முயல், வெண்பன்றி வளர்ப்பு பயிற்சி</u>

கரூர், : பண்டுதகாரன்புதூர் பயிற்சி மையத்தில் வரும் 30ம்தேதி முயல், வெண்பன்றி வளர்ப்பு பற்றிய ஒருநாள் பயிற்சி நடைபெறுகிறது. கரூர் கால்நடை மருத்துவ பல்கலை. பயிற்சி, ஆராய்ச்சி மைய இணை பேராசிரியர் அகிலா விடுத்துள்ள செய்திக்குறிப்பு: கரூர் பண்டுதகாரன்புதூரில் அமைந்துள்ள கால்நடை பல்கலை. பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய வளாகத்தில் வரும் 30ம்தேதி அன்று முயல் மற்றும் வெண்பன்றி வளர்ப்பு பற்றிய ஒரு நாள் பயிற்சி நடைபெறவுள்ளது. முயல் வளர்ப்பு தொழில் குறுகிய காலத்தில் (12 முதல் 14 வாரத்தில்) கணிசமான லாபம் ஈட்டுவதால் பொதுமக்களிடையே நல்ல வரவேற்பை பெற்றுள்ளது. அதேபோல கரூர் மாவட்டத்தில் பன்றி வளர்ப்பும் பிரபலம் அடைந்து வருகிறது. இப்பயிற்சியில் முயல் மற்றும் பன்றி வளர்ப்பில் உள்ள அறிவியல் ரீதியான பராமரிப்பு முறைகள், வீட்டமைப்பு, தீவன மேலாண்மை, தாக்கும் நோய்கள் அவற்றை தடுக்கும் முறைகள், விற்பனை உத்திகள், பண்ணைய பொருளாதாரம் ஆகிய தலைப்புகளில் பயிற்சி வழங்கப்பட உள்ளது. மேலும் பயிற்சியில் கலந்துகொள்வோர் காலை 10 மணிக்கு பயிற்சி மைய வளாகத்திற்கு வந்துவிடுமாறு கேட்டுக்கொள்ளப் படுகிறது. இப்பயிற்சியில் கலந்துகொள்ள விரும்புவோர், அலுவலக தொலைபேசி எண்ணை தொடர்பு கொண்டு முன்பதிவு செய்துகொள்ளலாம். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## <u>பெரம்பலூரில் விரைவில் விவசாயிகள் கண்காட்சி</u>

பெரம்பலூர், : பெரம்பலூரில் விவசாயிகள் கண்காட்சி விரைவில் நடத்தப்படும் என கலெக்டர் தெரிவித்தார். பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும்நாள் கூட்டம் வடக்குமாதவி சாலையிலுள்ள தமிழ்நாடு ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் நேற்று நடைபெற்றது. கலெக்டர்

தரேஸ்அகமது தலைமை வகித்தார். மாவட்ட வரு வாய் அதிகாரி ராஜன்துரை முன்னிலை வகித்தார். வேளாண்மைத்துறை இணைஇயக்குநர் அழகிரிசாமி வரவேற்றார். கூட்டத்தில் கலெக்டர் தரேஸ்அகமது பேசியதாவது: பெரம்பலூர் மாவட்டம் பருத்தி, மக்காச் சோளம், சின்ன வெங்காய சாகுபடியில் முன்னணி மாவட்டமாக திகழ்கின்றது. இங்கு சாகுபடி செய்யப்படும் பருத்தி, மக்காச்சோள விளைபொருட்களை எளம்பலூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்திற்கு கொண்டுவந்து சரியான எடை, சரியான விலைக்கு விற்பனை செய்து பயன்பெற வேண்டுமென்றே சிறப்பு விழிப்புணர்வு கூட்டமாக விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் இங்கு நடத்தப்படுகிறது. ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் விளைபொருட்களை விற்பதன் மூலம் தரகு கிடையாது, சரியான எடை, விளைபொருட்களை இருப்புவைத்து ரூ.2லட்சம் வரை பொருளீட்டுக்கடன் பெறும் வசதியுள்ளது. பொருளீட்டுக் கடனுக்கு முதல் 15 நாட்கள் வரை வட்டி கிடையாது. 16ம் நாள் முதல் ரூ. 5 மட்டுமே வட்டிபெறப்படும். எனவே அனைத்து விவசாயிகளும் ஒழுங்குமுறை விற்பனைகூடத்திற்கு விளைபொருட்களை கொண்டுவந்து விற்பனைசெய்து பயன்பெறவேண்டும். இதற்கு விவசாய சங்க தலைவர்கள் விவசாயிகளிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தவேண்டும். ஜனவரியில் நடைபெற்ற ஏலத்தில் இதுவரை விவசாயிகள் கொண்டுவந்த 2,707 கிலோ எடையுடைய 53 பருத்தி மூட்டைகள் ரூ. 89,621க்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. இந்த ஆண்டிற்கு சொட்டுநீர் பாசனம் சிறு, குறு விவசாயிகளுக்கு 100 சதவீத மானியத்திலும், 5 ஏக்கருக்கு மேலுள்ளவர்களுக்கு 75 சதவீத மானியத்திலும் அமைத்துக்கொள்ள அர சாணை பெறப்பட்டுள்ளது. சென்ற ஆண்டிலிருந்த சொட்டு நீர்ப்பாசன நிறுவனங்கள் அனைத்தும் இந்த ஆண்டும் செயல்படும். விவசாயிகள் விரும்பிய நிறுவனத்தை தேர்வுசெய்து சொட்டுநீர்ப் பாசனத்தை அமைத்துக்கொள்ளலாம். திருச்சியைப்போல பெரம்பலூர் மாவட்டத்திலும் விவசாயிகள் கண்காட்சி விரை வில் நடத்தப்படவுள்ளது எனத்தெரிவித்தார். முன்னதாக, கலெக்டரின் நேர்முகஉதவியாளர் (வேளாண்மை) கனகசபை பேசுகையில், பெரம்பலூர் மாவட்டத்தில் வேளாண் துறைமூலம் நெல் 18.75 டன், நிலக் கடலை 4.68 டன்,

தானியப் பயிர்கள் 2.18 டன் மற்றும் பயறுவகைப் பயிர்கள் 2.3 டன் உள்ளிட்ட விதைகள் வேளாண் விரிவாக்க மையங்களில் இருப்பில் வைக்கப் பட்டுள்ளது. தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகள் மற்றும் தனியாரில் உரங்கள் போது மான அளவு இருப்பு வைக்கப்பட்டு வினியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும் யூரியா 61 டன், டி.ஏ.பி 171 டன், பொட்டாஷ் 338 டன், என்.பி.கே 570 டன் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களில் இருப்புள்ளது என்று தெரிவித்தார்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**பெருந்துறை வாரச்சந்தையில் ரூ.13¼ லட்சத்துக்கு தேங்காய் விற்பனை**



பெருந்துறை வாரச்சந்தையில் ரூ.13 லட்சத்து 30 ஆயிரத்துக்கு தேங்காய் விற்பனைஆனது.

தேங்காய்

பெருந்துறை வாரச்சந்தையில் வாரந்தோறும் வெள்ளி மற்றும் சனிக்கிழமை களில் தேங்காய் விற்பனை நடைபெறும். இது விவசாயிகளுக்கும், வியாபாரிகளுக்கும் நடக்கும் நேரடி விற்பனை ஆகும். நேற்று கூடிய வாரச்சந்தைக்கு கர்நாடக மாநிலம் மைசூர் மற்றும் பொள்ளாச்சி பகுதிகளில் இருந்து முதல் தர தேங்காய் 20 ஆயிரம் கொண்டு வரப்பட்டு இருந்தன. பெருந்துறை மற்றும் அதை சுற்றியுள்ள காஞ்சிக்கோவில் பெத்தாம்பாளையம், திங்களூர், வெள்ளோடு, சென்னிமலை, அறச்சலூர் ஆகிய ஊர்களில் இருந்து 2 மற்றும் 3-ம் தர தேங்காய்கள் 80 ஆயிரம் கொண்டு வரப்பட்டு இருந்தன. மொத்தம் ஒரு லட்சம் தேங்காய்களை விவசாயிகள் விற்பனைக்காக கொண்டு

வந்திருந்தனர்.

ரூ.13¼லட்சத்துக்குவிற்பனை

இதில் முதல் தர தேங்காய் ஒன்று 15 ரூபாய் முதல் 16 ரூபாய் 50 காசு வரை விற்பனை ஆனது. இது கடந்த வாரத்தை விட ஒரு ரூபாய் 50 காசு கூடுதலாக விற்பனை ஆனது. 2-ம் தர தேங்காய் ஒன்று 11 ரூபாய் முதல் 12 ரூபாய் 50 காசு வரை விற்பனை ஆனது. 3-ம் தரம் தேங்காய் 9 ரூபாய் முதல் 10 ரூபாய் 50 காசு வரை விற்பனை ஆனது. தேங்காய் மொத்தம் ரூ.13 லட்சத்து 30 ஆயிரத்துக்கு விற்பனை ஆனது.

## கூடலூர் பகுதியில் மொச்சைக்காய் வரத்து குறைவு; விலை அதிகரிப்பு



கூடலூரில் மார்க்கெட்டிற்கு மொச்சைக்காய் வரத்து குறைந்ததால், விலை அதிகரித்து உள்ளது.

மொச்சைக்காய் விற்பனை

தேனி மாவட்டம் கூடலூர் மேற்குதொடர்ச்சி மலையடிவாரத்தில் மானாவாரி நிலங்களில் மொச்சைக்காய் அதிக அளவில் பயிரிடப்பட்டு வருகிறது. இந்த பகுதியில் ஐப்பசி மாத தொடக்கத்தில் மொச்சைக்காய் விளைச்சல் அதிகம் ஏற்பட்டது. இந்த மொச்சைக்காய் ஒரு கிலோ ரூ.40 முதல் ரூ.58 வரை விற்பனை ஆனது. இந்த நிலையில் தை மாத முதல் வாரத்தில் மொச்சைக்காய் வரத்து அதிகம் வந்ததால் விலை குறைய தொடங்கியது. இதையடுத்து பொங்கல் பண்டிகையையொட்டி மொச்சைக்காய் விலை குறைந்து ஒரு கிலோ ரூ.18–க்கு விற்பனை செய்யப்பட்டது. ஆனால் கடந்த சில நாட்களாக கூடலூர் பகுதிகளில் மொச்சைக்காய் விளைச்சல் குறைந்து விட்டது.

விலை அதிகரிப்பு

இதனால் மார்க்கெட்டுக்கு மொச்சைக்காய் வரத்து குறைந்து, போய்விட்டது. அதன் விலை அதிகரித்தது. விவசாயிகளிடம் இருந்து வியாபாரிகள் ஒரு கிலோ

ரூ.21 முதல் ரூ.25 வரை கொள்முதல் செய்து வருகின்றனர். சில்லரை விற்பனைக்கு வியாபாரிகள் ரூ.25 முதல் ரூ.30 வரை விற்று வருகின்றனர்.

இதுகுறித்து வியாபாரிகளிடம் கேட்ட போது, 'ஆண்டுக்கு ஒரு முறை மட்டுமே மொச்சைக்காய் விளைச்சல் அதிகரிக்கும். தற்போது மொச்சைக்காய் விளைச்சல் குறைந்து உள்ளது. இந்த மொச்சைக்காய் மாசி மாதம் வரை விற்பனைக்கு வரும் என எதிர்பார்க்கிறோம்' என்றனர்.

**ஊட்டியில், ரோஜா செடிகளை கவாத்து செய்யும் பணி மும்முரம்**



கோடை சீசனை முன்னிட்டு ஊட்டி ரோஜா பூங்காவில் ரோஜா செடிகளை கவாத்து செய்யும் பணியை கலெக்டர் சங்கர் நேற்று தொடங்கி வைத்தார்.

4ஆயிரம்ரகங்கள்

ஊட்டி ரோஜா பூங்கா கடந்த 1995-ம் ஆண்டு நூற்றாண்டு மலர் கண்காட்சியின் நினைவாக தொடங்கப்பட்டது. ஆரம்பத்தில் ஆயிரத்து 500-க்கும் குறைவான ரோஜா ரகங்களை கொண்டு இந்த பூங்கா தொடங்கப்பட்டது. இதன் பிறகு ஆண்டுதோறும் இந்த பூங்காவில் பல்வேறு வகையான புதிய ரக ரோஜா செடிகள் உலகம் முழுவதும் இருந்து கொண்டு வரப்பட்டு நடவு செய்யப்பட்டன. இதன் பலனாக தற்போது 4 ஆயிரம் ரகங்கள் இந்த பூங்காவில் உள்ளது. இதில் 27ஆயிரம் ரோஜா செடிகளும் காணப்படுகின்றன. இதில் நீலம், பச்சை, சிகப்பு, கருஞ்சிகப்பு, மஞ்சள், வெள்ளை, ரோஸ், ஊதா உள்ளிட்ட பல்வேறு வண்ணங்களில்ரோஜாசெடிகள்பூக்கின்றன.

ரோஜாகண்காட்சி

கோடை சீசனை முன்னிட்டு ஊட்டி ரோஜா பூங்காவில் ஆண்டு தோறும் மே மாதத்தில் ரோஜா கண்காட்சி நடத் தப்படுகிறது. இதற்காக ஆண்டுதோறும் ஜனவரி மாதம் இறுதியில் ரோஜா செடிகள் கவாத்து செய்யப்படும். இந்த ஆண்டு ரோஜா செடிகள் கவாத்து செய்யும் பணி நேற்று தொடங்கியது. இதில் மாவட்ட கலெக்டர் சங்கர் கலந்து கொண்டு ரோஜா செடியை கவாத்து

செய்யும் பணியை தொடங்கி வைத்தார். இதில் மாவட்ட தோட்டக்கலை துறை இணை இயக்குனர் மணி உள்பட தோட்டக்கலை துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர். மொத்தம் 4 அடுக்குகளை கொண்ட ரோஜா பூங்காவில் முதல் அடுக்கில் ரோஜா செடிகள் கவாத்து செய்யப்பட்டன. சுற்றுலா பயணிகள் ஆர்வம் இன்னும் சில நாட்களில் ரோஜா பூங்காவில் உள்ள அனைத்து ரோஜா செடிகளும் கவாத்து செய்யப்பட்டு விடும் என்று அதிகாரிகள் தெரி வித்தனர். மேலும் ரோஜா செடிகள் கவாத்து செய் யப்பட்டதால் அதில் பூத்திருந்த ரோஜா மலர்களை சுற்றுலா பயணிகள் ஆர்வமுடன் எடுத்து சென்ற னர். கவாத்து செய்யப்பட்ட ரோஜா செடிகளில் வருகிற ஏப்ரல் மாதம் 2-வது வாரம் முதல் பூக்கள் பூக்க தொடங்கும் என்று அதிகாரிகள் தெரிவித் தனர்.

## விவசாயிகளுக்கு பயிர்காப்பீடு தொகை விரைவில் வழங்கப்படும் கலெக்டர் தகவல்



ராமநாதபுரம், விவசாயிகளுக்கு பயிர் காப்பீடு தொகை விரை வில் வழங்கப்படும் என கலெக்டர் நந்தகுமார் தெரிவித்தார்.

### குறைதீர்க்கும் கூட்டம்

ராமநாதபுரம் கலெக்டர் அலுவலகத்தில் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் கலெக்டர் நந்தகுமார் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட வருவாய் அதிகாரி விசுவநாதன் விவசாய இணை இயக்குனர் கிருஷ்ணமூர்த்தி கலெக்டரின் நேர்முக உதவி யாளர் (விவசாயம்) கனகராஜ் ஆகியோர் முன்னிலை வகித் தனர். இதில் கலெக்டர் பேசி யதாவது:–

கடந்த ஆண்டுக்கான ராபி பருவ நிலக்கடலை, மிளகாய் பயிர்களுக்கான காப்பீடு தொகை ஒதுக்கீடு செய்யப் பட்டு வந்துவிட்டது. அது விரைவில் விவசாயிகளிடம் வழங்கப்படும். கடந்த ஆண் டுக் கான நெல் விவசாயி களுக் கான பயிர் காப்பீடு ரூ.250 கோடி வழங்க மத்திய அரசின் வேளாண் காப்பீடு நிறுவ னத்திற்கு கருத்துரு அனுப்பப் பட்டு உள்ளது. இந்த தொகை யும் 15

நாட்களில் வந்து விடும். எனவே விவசாயிகளுக்கு கடந்த ஆண்டுக்கான பயிர் காப்பீடு தொகை விரைவில் வழங்கப்படும். கடந்த 2012– 13–ம் ஆண்டுக்கான மிளகாய் பயிர் இன்சூரன்ஸ் தொகையும் சேர்த்து வழங்கப்பட உள்ளது. வட்டார வாரியாக 50 இடங் களில் நெல் கொள்முதல் நிலையம் திறக்கப்படும். தற் போது 14 இடங்களில் திறக் கப்பட்டு செயல்பட்டு வரு கிறது. நெல் வரத்து அதிகம் உள்ள இடத்தில் கூடுதலாக கொள்முதல் நிலையம் அமைக்கப்படும். நெல்லில் ஈரப்பதம் 17 சதவிதத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும். சன்ன ரக நெல் ஒரு குவி ண்டால் (100 கிலோ) ரூ.1470க் கும், மட்டை ரக நெல் ரூ.1410க் கும் கொள்முதல் செய்ய அரசு விலை நிர்ண யித்து உள்ளது. விவசாய நிலங் களில் கருவேல மரத்தை அகற்ற அரசு சில விதி முறைகளை வகுத்து உள்ளது.

<u>பொது ஏலம்</u>

பொது ஏலம் முறையில் அவற்றை வெட்ட நடவடிக்கை எடுக்கப்படும். தொருவளூரில் விவசாய கூட்டுறவு சங்க கட்டிடம் விரைவில் கட்டப் படும். வேளாண் பொறியியல் துறை மூலம் 4 கதிர் அறுப்பு எந்திரங்கள் மணிக்கு ரூ.875 வீதம் விவசாயிகளுக்கு வழங் கப்பட்டு வருகிறது. தற்போது 1.20 லட்சம் எக்டேரில் நெல் அறுவடைக்கு தயாராக உள் ளது. தேவைக்கு ஏற்ப கூடுதல் எந்திரங்கள் வரவ ழைக்கப் படும். கூட்டுறவு வங்கிகள் மூலம் நடப்பு ஆண் டில் ரூ.63 கோடி பயிர் கடன் வழங்கப் பட்டு உள்ளது. 1091 டன் உரங்கள் கையிருப்பு உள்ளது. இவ்வாறு பேசினார். கூட் டத்தில் விவசாய துணை இயக்குனர் கமாலுதீன் உள்பட அனைத்து துறை அதிகா ரிகள்,விவசாயசங்க பிரதிநிதிகள் கலந்துகொண்ட னர்.

## <u>சின்னமனூர் பகுதிகளில் வாழை மரங்களுக்கு ஊடுபயிராக வெள்ளரி சாகுபடி அதிகரிப்பு</u>



சின்னமனூர் பகுதிகளில் வாழை மரங்களுக்கு இடையே ஊடுபயிராக வெள்ளரிக்காய் சாகுபடி செய்வது அதிகரித்து வருகிறது.

வெள்ளரிசாகுபடி

கோடை காலங்களில் மட்டுமே கிடைக்கும் மருத்துவ குணம் நிறைந்த வெள்ளரிக்காய் தேனி மாவட்டம் சின்னமனூர் அருகேயுள்ள வெள்ளம் மாள்புரம், ஓடைபட்டி, சின்ன ஓவுலாபுரம் போன்ற பகுதிகளில் அதிக அளவில் தற்போது பயிரிடப்பட்டு வருகிறது. இந்த வெள்ளரிக்காய் சாகுபடி பயிரிட்ட நாளில் இருந்து சரியாக 50 முதல் 60 நாட்களில் காய்க்க தொடங்கி விடும். காய்க்க தொடங்கிய நாளில் இருந்து 30 நாட்கள் தொடர்ந்து காய்க்கும். ஒரு ஏக்கருக்கு 5 டன் வெள்ளரிக்காய்கள் பறிக்கப்படும். தற்போது ஏக்கருக்கு ரூ.15 ஆயிரம் முதல் ரூ.20 ஆயிரம் வரை செலவு ஆகி வருகிறது. வெள்ளரி சாகுபடிக்கு அதிக முதலீடு தேவையில்லை. ஆகவே சின்னஓவுலாபுரம் பகுதியில் வாழையில் ஊடுபயிராக வெள்ளரி சாகுபடி செய்யப்பட்டுள்ளது. வாழை மரங்களை பாதுகாக்க பயன்படுத்தப்படும் உரம் மற்றும் பூச்சி மருந்து வெள்ளரி செடிகளுக்கு போதுமானதாக உள்ளது. ஆகவே தற்போது விவசாயிகள் வெள்ளரி சாகுபடி செய்வதில் தீவிரம் காட்டி வருகின்றனர்.

விவசாயிகள்மகிழ்ச்சி

இதுகுறித்து அந்த பகுதி விவசாயிகளிடம் கேட்ட போது, ‘வாழை மரங்களுக்கு இடையில் ஊடுபயிராக பயிர் செய்யப்பட்டுள்ள வெள்ளரி சாகுபடிக்கு அதிக முதலீடு தேவையில்லை. குறைந்த முதலீட்டில் அதிக லாபம் ஈட்டி தரும் பயிராக வெள்ளரிக்காய் உள்ளது. வியாபாரிகளே தோட்டத்திற்கு வந்து கொள்முதல் செய்து வருகின்றனர். 100 வெள்ளரிக்காய்கள் ரூ.700 முதல் ரூ.800 வரை விற்பனை செய்யப்படுகிறது. தற்போது வெள்ளரிக்காய்களுக்கு விலை அதிகம் கிடைப்பதால் மகிழ்ச்சியாக உள்ளது’ என்றனர்.

## <u>டெல்டா மாவட்டங்களில் 100 நாள் வேலை திட்டத்தை செயல்படுத்த வேண்டும் விவசாய தொழிலாளர் சங்க தலைவர் வலியுறுத்தல்</u>

டெல்டா மாவட்டங்களில் 100 நாள் வேலை திட்டத்தை செயல்படுத்த வேண்டும் என விவசாய தொழிலாளர் சங்க தலைவர் திருநாவுக்கரசு வலியுறுத்திஉள்ளார்.

பொதுக்கூட்டம் திருவாரூர் மாவட்டம் பேரளத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு

கட்சி பொதுக்கூட்டம் நடந்தது. கூட்டத்திற்கு ஒன்றிய செயலாளர் வீரபாண்டியன் தலைமை தாங்கினார். மாவட்டக்குழு உறுப்பினர்கள் காளிமுத்து, மனோகரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில் அகில இந்திய விவசாய தொழிலாளர் சங்க தலைவர் திருநாவுக்கரசு கலந்து கொண்டு பேசினார். அப்போது அவர் கூறியதாவது:- டெல்டா மாவட்டத்தில் விவசாய தொழிலாளர்களுக்கு வேலை இல்லை. எனவே விவசாய தொழிலாளர்கள் பயன் அடையும் வகையில் உடனடியாக 100 நாள் வேலை திட்டத்தை தொடங்க வேண்டும். பேரளம் மெயின்ரோட்டில் அமைந்துள்ள அரசு டாஸ்மாக் மதுபான கடையை உடனே இடமாற்றம் செய்ய வேண்டும். மழையால் பாதிப்படைந்த சாலைகளை சீரமைக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார். கூட்டத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி மாவட்ட செயலாளர் நாகராஜன், மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் பாலசுப்பிர மணியன், ரெங்கசாமி, விவசாய சங்க மாவட்ட செயலாளர் சுந்தரமூர்த்தி, விவசாய தொழிலாளர் சங்க மாவட்ட செயலாளர் குமாரராஜா, ஜனநாயக மாதர் சங்க செயலாளர் தமிழ்ச்செல்வி உள்பட பலர் கலந்து கொண்டனர். முடிவில் பேரளம் நகர செயலாளர் ராஜேந்திரன் நன்றி கூறினார்